# மூவர் மரணம் குறித்து உயர்மட்ட விசாரணை

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு
The EELANADU

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under No QB/8945/78

மலர் 21 ஆடி 29 றம்ழான் 20 இதழ் 183
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 14-8-79

## சுகாதார அமைச்சருக்கும் புகார்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, அடுத்தடுத்து கட்டிலால் விழுந்து மரணமான மூன்று நோயாளிகளின் மரணம் குறித்து உயர் மட்ட விசாரணை நடைபெறும் என்று "ஈழநாடு" அறிகிறது.

யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இந்த மூன்று நோயாளிகளும் ஒரே வார்த்தில் கட்டிலால் விழுந்து மரணமானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இத் துயரச் சம்பவங்கள் இம்மாதம் 4-ம் திகதி முதல் 10-ம் திகதி வரை நிகழ்ந்துள்ளன.

திருநெல்வேலியைச் சேர்ந்த குட்டித்தம்பி செல்லம்மா என்பவர் இம்மாதம் 4-ம் திகதி கட்டிலால் விழுந்து மரணமானார். நாரந்தனையைச் சேர்ந்த வெற்றிவேலு பூபதி 6-ம் திகதி கட்டிலால் விழுந்து மரணமானார். இதே மாதிரியாக இம் மாதம் 10-ம் திகதி வதிரி இரும்பு மதவடியைச் சேர்ந்த தர்மலிங்கம் என்றழைக்கப்படும் கந்தசாமி தங்கராசா கட்டிலால் விழுந்து மரணமானார்.

முதலிரு மரணங்களும் பத்தாவது வார்ட்டிலும், கடைசி மரணச் சம்பவம் பதினொருவது வார்ட்டிலும் இடம் பெற்றுள்ளது.

மேற்படி மூன்று மரணங்கள் தொடர்பாக நிலவிய பலவேறு சந்தேகங்களின் மத்தியில் இப்பொழுது உயர் மட்ட விசாரணை நடைபெறுவதற்கான சூழ்நிலை பிறந்திருக்கிறது.

### ஆஸ்பத்திரி கமிட்டி

இம்மூன்று மரணங்கள் தொடர்பாக அறிக்கையொன்றைத் தங்களுக்குச் சமர்ப்பிக்குமாறு வைத்திய அத்தியட்சகரிடம் கோரியுள்ள ஆஸ்பத்திரி கமிட்டி இது குறித்து உரிய விசாரணை நடைபெறவேண்டும் எனத் தெரிவித்துள்ளது.

யாழ் ஆஸ்பத்திரி கமிட்டித்

[6-ம் பக்கம் பார்க்க]

★ பொதுமக்களின் குறைபாடுகளை

# யாழ்.மாவட்ட அமைச்சர் நேரில் கேட்டறிந்தார்!

## செயலக மாநாட்டுக்கு கூட்டணி எம். பி.க்கள் சமுகமளிக்கவில்லை

(யாழ்ப்பாணம்)
நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற இவ்வாண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட மகாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி எம் பிக்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை.

யாழ் மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டில் யாழ். அரசாங்க அதிபர் திரு. யோகேந்திர துரைசுவாமி, இலாகாத் தலைவர்கள், யாழ். செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நேற்றுக் காலை யாழ். செயலகத்தில் மாவட்ட அமைச்சரை நேரில் சென்று சந்தித்த பொதுமக்களின் குறைபாடுகளை அமைச்சர் நேரில் கேட்டறிந்து ஆவன செய்வதாக உறுதியளித்தார்.

முன்னர் மாவட்ட அமைச்சராக இருந்த திரு. மன்சூரினால் ஒழுங்கு செய்யப்பட்ட மாநாட்டில், தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்கள் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. [ஈ]

## அமைச்சர் 'இராசு' மன்னார் விஜயம்

[யாழ்ப்பாணம்]
அமைச்சர் திரு செல்லையா ராசதுரை முதல்தடவையாக எதிர்வரும் வெள்ளிக்கிழமை மன்னாருக்கு விஜயஞ்செய்கிறார்.

அமைச்சரது உத்தியோக பூர்வவிஜய நிகழ்ச்சிகளை மன்னார் அரசாங்க அதிபர் திரு எஸ் ஜகநாதன் வெளியிட்டுள்ளார். நிகழ்ச்சிகளில் மன்னார் செயலகத்தில் நடைபெறும் அபிவிருத்தி சம்பந்தமான குழுக் கூட்டத்தில் மன்னார் எம் பி பி எஸ் சூசைதாசன் வரவேற்புரை நிகழ்த்தவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. [ஈ]

## ஞாயிறு வாகனத்தடை: அனுமதிப் பத்திரம் கச்சேரியில் கிடைக்கும்

[யாழ்ப்பாணம்]
ஞாயிற்றுக்கிழமைகளில் தடைசெய்யப்பட்ட நேரங்களில் தனிப்பட்ட கார்கள் வாகனங்கள் செலுத்துவதற்கு யாழ் கச்சேரியில் அனுமதி வழங்கப்படுகிறது.

உதவி அரசாங்க அதிபர்களான திரு. எஸ். எஸ் தர்மபாலன், எஸ். பஞ்சலிங்கம் ஆகியோர் அனுமதிப் பத்திரம் வழங்கிவருகின்றனர். [ஈ]

## என். எம்.மின் உடல்நிலை கவலைக்கிடம்

[கொழும்பு]
லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என் எம். பெரேராவின் உடல்நிலை கவலைக்கிடமாகவுள்ளது.

கொழும்பு, பொதுவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் டாக்டர் பெரேரா டாக்டர்களின் தீவிரபரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். [இ]

## வானொலி நிலைய கட்டட வேலை 20-ல் ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]
யாழ்ப்பாணத்தில், பிராந்திய வானொலிநிலையத்திற்கான கட்டடவேலைகள் இம் மாதம் 20ம் தேதி ஆரம்பமாகும்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிர்வாக அதிபர் திரு இராஜேந்திரா துரைசுவாமி, இந்நிலையம் அமைப்பதற்கான இடத்தைப் பார்வையிட்டு சென்றுள்ளார்.

பண்ணைப் பகுதியில் இதற்கென 12 பரப்பு காணி ஒதுக்கப்பட்டுள்ளது. [ஈ]

## பிரதமருக்கு சீனவில் மகத்தான வரவேற்பு

[பீஜிங்]
நேற்று இங்கு விஜயம் செய்த இலங்கைப் பிரதமர் திரு ஆர் பிரேமதாசாவுக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பிரதமரும் அவரது பாரியாரும் குழுவினரும் இங்கு வந்துசேர்ந்தபோது, விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது பிரதமர் பிரேமதாசாவை சீனப் பிரதமரும், உதவிப் பிரதம

(6-ம் பக்கம் பார்க்க)

## முக்கிய அறிவித்தல்

### "சபரிமலை ஸ்ரீ ஐயப்பன்"

"சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் திரைப்படம் தவிர்க்கமுடியாத காரணத்தால் பின்போடப் பட்டுள்ளதை ரசிகப் பெருமக்களுக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

எனினும் எதிர்வரும் 17-ம் திகதி முதல் மீண்டும் "சபரிமலை ஸ்ரீ ஐயப்பன்" மனோகரா திரையில் காட்சி அளிப்பார் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

ரசிகர்களுக்கு இதனால் ஏற்பட்ட சிரமத்துக்கு வருந்துகிறோம்.

மனேஜர்
மனோகரா தியேட்டர்.

ஆகஸ்ட் 31 வரை

## கூட்டுறவுக் கடைகள் தினமும் திறந்திருக்கும்

[கொழும்பு]
சகல கூட்டுறவுக் கடைகளும் இம்மாதம் 31-ந் திகதி வரை தினசரி திறந்திருக்கும்.

உணவு முத்திரைகளை விநியோகிப்பது தொடர்பாகவே கூட்டுறவுக் கடைகள் இம் மாதம் 31-ந் திகதி வரை தினமும் திறந்திருக்கும்.

## மாண்டவர் தொகை 3000-ஆக அதிகரிப்பு!

[புதுடில்லி]
குஜராத்தின் ஒரு பகுதியில், ஆற்றின் அணைக்கட்டு உடைத்து திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதில் மாண்டவர்கள் தொகை மூவாயிரமாக அதிகரித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகளுக்கு ஏற்பட்ட சேதம் ஒரு கோடி டாலர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. சில இடங்களில் பதின்மூன்றடி வெள்ளம் காணப்பட்டது.

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS LIBRARY
RECEIVED 1979-8-14
PERIODICALS DIVISION

# மந்திரி தொண்டமானுக்கு பயமுறுத்தல் கடிதம்

## நகரசபை உறுப்பினர் கைது!

[கொழும்பு]

இராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமானுக்கு பயமுறுத்தல் கடிதம் எழுதியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள நகரசபை உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திரு. தொண்டமானை அவமானப்படுத்தும் வகையில் பயமுறுத்தும் வகையிலும் நாவலப்பிட்டி நகரசபை உறுப்பினர் ஒருவர் கடிதம் எழுதியுள்ளதாக திரு தொண்டமானின் பொதுமக்கள் தொடர்பு அதிகாரி திரு பி. எம். மகாலிங்கம் பொலிசாருக்குச் செய்தபுகாரை அடுத்தே அந்த நகரசபை உறுப்பினர் கைது செய்யப்பட்டார்.

இம் மாதம் 18ம் திகதி நாவலப்பிட்டியில் திரு தொண்டமான் கலந்து கொள்ளும் கூட்டம் ஒன்றைக் குழப்பப் போவதாகவும் அந்த உறுப்பினர் கடிதம் எழுதியிருந்தாராம்.

சந்தேகநபரால் எழுதப்பட்டதாகக் கூறப்படும் கடிதங்களையும் பொலிசார் கைப்பற்றினர். [இ]

## துன்னாலை இரட்டைக் கொலை:

# முக்கிய சந்தேகநபர்கள் இருவரும் கைது

[புலோலி]

துன்னாலை தெற்கு வேம்படியைச் சேர்ந்த பரமன் தர்மன், வல்லி ஆறுமுகம் ஆகிய இருவரினதும் கொலை சம்பந்தமாகப் பொலிசாருக்குத் தேவைப்பட்ட முக்கிய சந்தேக நபர்கள் எனக் கருதப்படும் இருவரும் பருத்தித்துறைப் பொலிஸ் கான்ஸ்டபிள் எம் விவேகானந்தனிடம் சிக்கிக் கொண்டனர்.

இட்டினன் வனதானம், பொன்னன் மகேந்திரன் ஆகிய இருவருமே கான்ஸ்டபிள் விவேகானந்தனிடம் சிக்கிக் கொண்டவர்களாவர். இவர்கள் இருவரும் பருத்தித்துறை நீதிமன்றத்தின் நீதவான் திரு. கே. ஞானச்சந்திரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இக்கொலைகள் சம்பந்தமாக 24 பேர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். [க]

# "கிராமப்பாடசாலைகளில் இன்றைய அரசு அக்கறை"

[வவுனியா]

"நகரப்புறப் பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் சகல வசதிகளையும் கிராமப்புற மாணவர்களும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதைக் கருத்திற்கொண்ட கிராமப்புறப் பாடசாலைகளின் வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்தி வருகிறது இன்றைய அரசாங்கம் இதனாலேயே பின்தங்கிய கிராமப் புறங்களென்று ஒதுக்கப்பட்ட பிரதேசங்கள் எல்லாம் நகரப் புறங்களுடன் போட்டியிட்டு முன்னேறி வருகின்றன" என்று வவுனியா பழையவாடி கனிஷ்ட வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச்சபை அங்குரார்ப்பணக் கூட்டத்திற்குத் தலைமைவகித்த புளியங்குளம் வட்டாரக்கல்வியதிகாரி திரு. செ. கணபதிப்பிள்ளை குறிப்பிட்டார்.

அதிபர் திரு. பா. இராசநாதன் உரையாற்றுகையில், கிராமப்புறப் பாடசாலைகளை அபிவிருத்தியடையச் செய்வதற்கு அரசாங்கம் மேற்கொண்டுவரும் சகல நடவடிக்கைகளுக்கும் பாடசாலை அபிவிருத்திச் சபைகள் ஒத்துழைப்புதல்வேண்டும் என்று கூறினார்.

"கிராமப்புறப் பாடசாலைகளைப் பொறுத்த மட்டில் அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வசதிகள் மிகக்குறைவாக இருப்பதனாலேயே அவர்கள் அங்கு கடமையாற்ற பின்னிற்கிறார்கள் எனவே இவ் ஆசிரியர்களின் குறைபாட்டை நீக்குவதில் அரசு கூடிய கவனமெடுக்க வேண்டும்" என்றும் அதிபர் கூறினார். [புலோ. க]

# 1,05,000கார்கள் ஞாயிறன்று வீதியில் ஓடவில்லை

[கொழும்பு]

ஒரு லட்சத்து 5 ஆயிரம் கார்கள் நேற்றுமுன்தினம் வீதியில் ஓடவில்லை.

எண்ணை நெருக்கடியைச் சமாளிக்க அரசுமேற்கொண்ட ஞாயிறுவாகனத் தடைச் சட்டம் முதல்தடவையாக அமுல் செய்யப்பட்டபோதே மேற்கூறியதொகை தனியார் கார்கள் சேவையில் ஈடுபடுத்தப் படவில்லை.

இத்திட்டத்திலிருந்து டாக்ஸிகள், லொறிவண்டிகள், மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் மேலும் பொலிஸ் ஆயுதப் படையினரது வாகனங்கள், அம்புலன்ஸ் வண்டிகள் ஆகியனவற்றிற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது இத்திட்டம் அமுல்படுத்தப்பட்ட தினமான கடந்த ஞாயிறன்று தலைநகரில் பிரதான இடங்களிலும், சந்திகளிலும் பொலிசார் வாகனங்களைச் சோதனையிட்டனர். சட்டத்தை மீறிய ஒருசில தனியார் வாகனங்கள் விசாரணைக்குட்படுத்தப் பட்டன

கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. சிறில் மத்யூ மேற்படி திட்டம் பற்றிப் பிரஸ்தாபிக்கையில், இதன்மூலம் பெருமளவிலான பெற்றோல் பாவனையைக் கட்டுப்படுத்தலாமெனவும் மேலும் எரிபொருள் இறக்குமதிக்காக விரயமாகும் அந்நிய செலாவணியைக் கணிசமான அளவு மீதப்படுத்தலாமெனவும் குறிப்பிட்டார் [இ]

## பரபரப்பு

[உடுப்பிட்டி]

அல்வாய் மேற்கு கடற்கரை வீதியில் கடந்தவாரம் பகல் வேளையில் ஆடை எதுவுமின்றி நிர்வாணமாக உலாவிய நபர் ஒருவர் இப்பகுதியில் சில மணி நேரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார்.

சக்கோட்டையில் வைத்து சிலரால் துரத்திப் பிடிக்கப்பட்ட 45 வயது மதிக்கத்தக்க இந் நபர் சாரம் அணிவிக்கப்பட்டார் பிரஸ்தாப நபர் மன நோயாளி என்பது பின்னர் தெரியவந்தது. [க]

## கொழும்பு விவேகானந்தா சமயபாடப்பரீட்சை:

# யாழ். கல்வி மாவட்ட மாணவர்கள் முதலிடம்

[கொழும்பு]

கடந்த ஆண்டு கொழும்பு விவேகானந்தா சபையினரால் நடாத்தப்பட்ட 49வது ஆண்டு சைவசமயப் பரீட்சையில் தோற்றிய 57,645 பரீட்சார்த்திகளில் 36 212 பேர் சித்தியடைந்துள்ளனர்.

இவர்களில் ஒவ்வொரு வகுப்புகளிலும் முதல் ஐந்து இடங்களிலும் அநேகமாக யாழ். கல்வி மாவட்ட மாணவர்கள் சித்தியெய்தியுள்ளனர் கடந்த ஆண்டு மட்டக்களப்பில் வீசிய சூறாவளி காரணமாக அங்கு பரீட்சை நடைபெறவில்லை. அதேவேளையில் ஆகக் கூடிய மாணவர்களை அனுப்பி வர்சையில் சிறப்புப் பரிசு பெறும் 8 பாடசாலைகளில் 6 பாடசாலைக்கான சான்றிதழ்களும் அதிகமாணவர்கள் சித்தியெய்திய 8 பாடசாலைகளுக்கான சான்றிதழ்களும். யாழ் கல்வி மாவட்டங்களுக்கு கிடைத்துள்ளது.

இவ்வாண்டுக்கான பரீட்சை நவம்பர் மாதம் நாலாம் திகதி ஆரம்பமாகும்.

பரீட்சையில் அகில இலங்கைப் பரிசில்பெறும் மாணவர் பாடசாலைப் பெயர்களும் ஒவ்வொரு வகுப்பிலும் தோற்றிய மாணவர் முதலானவற்றின் விபரங்கள் வருமாறு:

2ஆம் வகுப்பு - தோற்றியோர்: 6,474 1ஆவது செல்வி பிரேமளா கனகசபாபதி அல்வாய் அம்பாள்வித்தியாலயம், 2ஆவது செல்வன் முகுந்தன் பாலேந்திரன் வடமராட்சி இருதயக் கல்லூரி, 3ஆவது செல்வி விநிதா தர்மலிங்கம் இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை, 4ஆவது செல்வன் ஸ்ரீகாந் சண்முகாநந்தா தி/பெருந் பெரு விக்னேசுவர வித்தியாசாலை, 5ஆவது செல்வி மணிச்செல்வி செல்லராசா நெல்லியடி மெ மி த க பாடசாலை, செல்வி சாந்தரூபி சுதிரமலை, காரைநகர் வலந்தலை வடக்கு அ மி த க பாடசாலை, செல்வன் கருணாகரன் நடராசா கல்வயல் ஸ்ரீ சண்முகாநந்த வித்தியாசாலை.

3ஆம் வகுப்பு தோற்றியோர்: 10,333: 1ஆவது செல்வன் இரத்தினசிவம் செல்லத்துரை புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தர் கல்லூரி, 2ஆவது செல்வன் இராசேந்திரகுமார் சிவராசா, கொ/பம்பலப்பிட்டி இந்து கனிட்ட பாடசாலை, 3ஆவது செல்வன் மயூரதன் ஞானமூர்த்தி, கொ/டீ எஸ் சேனநாயக்க வித்தியாசாலை, 4 ஆவது செல்வி தமிழ்ச்செல்வி செல்வரத்தினம் தி/பெருந்தெரு விக்னேசுவர வித்தியாசாலை, 5 ஆவது செல்வன் சக்திவேல் சிவபாதசுந்தரம் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி. செல்வி இரஞ்சித் விக்னராசா க/புனித சில்வஸ்ரர் கல்லூரி. செல்வி காயத்திரி விமலநாதன் மூதூர் அந்நகார் மகளிர் ம. வித்தியாலயம், செல்வி வத்சலா பாலகிருஷ்ணன் முத்தூர்தீவு இ. த. க பாடசாலை, செல்வன் நா. ஜெயா உருத்திரபுரம் ம வித்தியாலயம்

4ஆம் வகுப்பு-தோற்றியோர் 10,416 1வது செல்வி ஜெயதேவி சபாரத்தினம், நெல்லியடி மெ மி த க பாடசாலை, 2வது செல்வி கிருபா மகாதேவன், இளவாலை கன்னியர் மடம், 3வது செல்வி குணசீதனி பரஞ்சோதி, வ திரு இருதயக்கல்லூரி, 4வது செல்வி வாசுகி இராசையா, பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரி 5வது [1] செல்விவசுமதி சிவராசசிங்கம், மெ பெ ஆங்கில பாடசாலை, செல்வன் சுரேஷ்வரன்-கிருஷ்ணபிள்ளை, தி/ புனித பிரான்சிஸ் சவேரியார் பாடசாலை, செல்வி வரலட்சுமி நடராசா, கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம், செல்வன் குகனேசன் பொன்னம்பலம் கொ/விவேகாநந்த மகாவித்தியாலயம், செல்வி சிவரூபி யோகசுந்தரம். மீசாலை விக்னேசுவர வித்தியாலயம்.

5ஆம் வகுப்பு தோற்றியோர்: 10,257 1வது செல்வி மதிவதனி நாகராசா சாவகச்சேரி இந்துக்கல்லூரி 2வது செல்வி கயல்விழி சுப்பிரமணியம் நெல்லியடி மெ மி த க பாடசாலை, 3வது செல்வி அரியரசனி கனகரத்தினம் சண்டிலிப்பாய் த க பாடசாலை. 4வது செல்வி இசைஞானி செல்வராசா கொக்குவில் இந்துக் கல்லூரிப் பிரதம பாடசாலை, 5வது செல்வி கமலகுமாரி பரமசாமி சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி, இருபாலினி கதிர்காமு சாவகச்சேரி இந்துக் கல்லூரி, செல்வன் சுரேஸ்வரன் பரமசாமி காங்கேசன்துறை நடேசுவரக் கல்லூரி, பிரேமதாஸ் கிருஷ்ணபிள்ளை அல்வாய் சித்திவிநாயகர் வித்தியாலயம்.

6ஆம் வகுப்பு தோற்றியோர் 6,418 1வது செல்வி சாந்தினி பத்மநாதன் தி சண்முக வித்தியாலயம், 2வது திருமகள் குருநாதன் யாழ்ப்பாணம் திருக் குடும்பக்கன்னியர்மடம், 3வது செல்வன் சுரேந்திரன் சரவணமுத்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, 4வது கணேசானந்தன் சபாரத்தினசர்மா தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி 5வது செல்வி கலைவாணி கதிர்காமத்தம்பி நெல்லியடி ம. ம. வித்தியாலயம், மஞ்சுளா- மகாதேவன்: உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம், குப்பிரியா சின்னத்துரை: இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலயம், சமலநாயகி- வைரமுத்து: இடைக்காடு ம. வித்தியாலயம்.

7ஆம் வகுப்பு: தோற்றியோர்: 4,573 1ஆவது செல்வன் மணிமாறன்- முத்துலிங்கம்: தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, 2ஆவது செல்வி சியாமளா- தெய்வேந்திரம்: மானிப்பாய் மகளிர் கல்லூரி, 3ஆவது செல்வி சத்தியபாமா சிதம்பரநாதன்: கொட்டாஞ்சேனை நல்லாயன் மகளிர் கல்லூரி. 4ஆவது அருள்நிதி சுப்பிரமணியம்: பருத்தித்துறை மெ. பெ. உ. பாடசாலை, 5வது செல்வி மங்களகௌரி- துரைசிங்கம்: கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, நந்தினி- கந்தசாமி: சந்திரோதயா ஸ்கந்தவரோதயக் கல்லூரி, மலர்க்கொடி- மாமுடி: ச/மோபிறே கல்லூரி, செல்வன் புஷ்பராசா வல்லிபுரம்: வ/செம்மலை கனிட்ட உயர் வித்தியாலயம்.

8ம் வகுப்பு- தோற்றியோர்: 7,184. 1வது செல்வன் செந்திவரன் ஞானமித்திரன் யாழ் மத்திய கல்லூரி, 2 வது செல்வி கல்யாணி குமாரசுவாமி: இராமநாதன் கல்லூரி, 3 வது செல்வி கமலாதேவி கந்தையா: காரைநகர் இந்துக் கல்லூரி, 4 வது செல்வன் சிவதயாளன் சிவபாதசுந்தரம்: யாழ் இந்துக் கல்லூரி, 5 வது செல்வன் சிவயோகன் சாம்பசிவமூர்த்தி: சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மலர்மதி முத்துலிங்கம்: தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, மோகலா காசிப்பிள்ளை: புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தர் கல்லூரிசெல்விசிவனுமைச்செல்வி செல்லப்பிள்ளை: தி மெ பெ ஆங்கிலபாடசாலை

9ம் வகுப்பு- தோற்றியோர்; 6,946. 1வது செல்வி வனஜாராணி விநாசித்தம்பி: சாவகச்சேரி இந்துக் கல்லூரி, 2 வது செல்வன் நவீனகுமார் சிவலிங்கம்: கொ/ பம்பலப்பிட்டி இந்து கனிஷ்ட பாடசாலை, 3 வது செல்வி யாழினி இராமநாதன்: தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, 4 வது செல்வி சிவரூபி சிவம்: கொ/ புனித பிரிஜட் கன்னியர்மடம், 5 வது செல்வி பாமினி சின்னத்தம்பி: பருத்தித்துறை மெ பெ உ. பாடசாலை, செல்வன் இரவீந்திரன் கணநாதபிள்ளை: கொ/ டி. எஸ். சேனநாயக்கா வித்தியாசாலை, செல்வி அனுஷா இன்னத்துரை: தி/ ஸ்ரீ சண்முக வித்தியாலயம், தமயந்தி வேலுசாமி: பது/ பண்டாரவளை திருமலர் பெண்கள் பாடசாலை.

10ம் வகுப்பு -தோற்றியோர்: 9,891, 1வது செல்வன் கோபிநாத் சந்திரசேகரம்: பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, 2 வது செல்வன் முகுந்தன் குமாரசுவாமி: யாழ் இந்துக் கல்லூரி, 2வது செல்வி பிரியதர்சினி பாலேந்திரா: யா/ வட இந்து மகளிர் கல்லூரி, 3வது செல்வி இளமதி நடராசா, மகாஜனக்கல்லூரி 4வது செல்வி புவனேஸ்வரி குமாரசுவாமி, உடுப்பிட்டி மகளிர்கல்லூரி. 5-வது [1] செல்வன் மனோகரன் சத்தியமூர்த்திசர்மா மானிப்பாய்இந்துக்கல்லூரி, செல்வன் சிவேந்திரன் சிவலிங்கம், சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி, செல்வி வான்மதி நமசிவாயம், பருத்தித்துறை மெ பெ உ பாடசாலை, செல்வி சசிசாந்தி கணபதி, கொ/ விவேகானந்த மகாவித்தியாலயம், செல்வி மங்களேஸ்வரி சண்முகம், கம்/வத்தளை புனித அன்னம்மாள் மகளிர் வித்தியால

(6-ம் பாகம் பார்க்க)

வரி விளம்பரம்

விற்பனைக்கு

PHANTOM TEMPAIR AIR CONDITIONER $1\frac{1}{2}$ TON நல்ல நிலையில் விற்பனைக்குண்டு, எம்மோ ஸஸ், 79. கே கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன்: 404. (3296)

5 ஜிதி தொடர் இலக்க பன்ரம் கப்பர் மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு ஜீவா பிரஸ், அளவெட்டி [தபால் கந்தோர் அருகாமை] 3297

## திருத்தம்

### கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை.

13-8-79ந் திகதியிட்ட இதேபத்திரிகையில் பிரசுரமான 3288 இலக்க மேற்படி விளம்பரத்தின் 1-ம் பந்தியில் காணப்படும் நிதியாளர்களினால் என்ற பதத்தை நிதியாளரினால் என்று திருத்தி வாசிக்கவும்

## மக்கள் கருத்து

### பரீட்சைத் திணைக்களத்தின் கவனத்திற்கு

இம்மாதம் 10ந் திகதி தொடக்கம் ஜி. ஸி. ஈ. பரீட்சை நாடெங்கும் நடந்து கொண்டிருக்கின்றது. இப்பரீட்சைக்கு ஜி ஸி ஈ பாடத் திட்டத்தில் படித்த மாணவ மாணவியரே முக்கியமாகத் தோற்றியுள்ளனர். இவர்களில் பலரும் ஏற்கனவே பரீட்சையில் சித்தியடைந்து மேற்படிப்பைத் தொடர்வதற்காகத் திறமைச் சித்தி பெறுவதற்காகப் பல தடவைகள் முயற்சித்தவர்களாவர்.

இப்பரீட்சார்த்திகள் தாம் உண்மையான பரீட்சார்த்திகள்தாம் என்பதை நிரூபிப்பதற்காக ஆள் அடையாள அட்டை, தபாற் திணைக்கள அடையாள அட்டை அல்லது பாஸ்போர்ட் போன்ற மூன்றில் ஒன்றைச் சமர்ப்பித்தால் மட்டுமே பரீட்சை எடுக்க அனுமதிக்குமாறு இத்தடவை கண்டிப்பான உத்தரவொன்று பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

படங்களில் சிபார்சு பெற்று வருபவர்களை அனுமதிக்கக் கூடாதென்று தெட்டத்தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு மாவட்டந்தோறும் நடாத்திய பரீட்சை நடைமுறை வகுப்புகளிலும் மேலதிகாரிகள் இதனை வற்புறுத்தியிருந்தனர்.

இதனால் இத்தடவை பலர் பரீட்சை நிலையங்களுக்குப் பரீட்சை எடுக்க வந்து ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர். இப்பரீட்சார்த்திகள் ஏற்கனவே அரசு வழங்கும் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்திருந்தும் உரிய நேரத்தில் கிடைக்காது படத்தில் சிபார்சு பெற்றுவந்திருந்தார்கள்.

இக்கண்டிப்பான உத்தரவைப் பரீட்சை மேற்பார்வையாளர்கள் கடைப்பிடிக்க வேண்டியேற்பட்டது.

இம்மாதம் 10ம் திகதி காலை வர்த்தகமும், மாலை ஆங்கிலமும் நடைபெற்று முடிந்தது. அடுத்த நாள் 11ம் திகதி காலை தாயகணிதம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது ஆள் அடையாளத்தை நிரூபிப்பதற்குப் படத்தில் பாடசாலை அதிபர் அல்லது உதவி அரசாங்க அதிபர் சிபார்சு பெற்றுவந்தால் அனுமதிக்குமாறு தந்திச் செய்தி கிடைத்தது.

இச்செய்தி உண்மையில் 10ம் திகதி காலை கிடைத்திருந்தால் பரீட்சார்த்திகள் பயனடைந்திருப்பார்கள். பரீட்சை மேற்பார்வையாளர்களும் பரீட்சார்த்திகளைத் திருப்பி அனுப்பும் துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியிருக்கமாட்டார்கள்.

ஒவ்வொரு பரீட்சை நிலையத்திலும் நாற்பதுக்கு மேற்பட்டவர்கள் பரீட்சை எடுத்திருந்தார்கள். அவர்களில் ஐந்து, பத்துப் பரீட்சார்த்திகள் பரீட்சார்த்திகள் பரீட்சை எடுப்பதற்கு அனுமதிக்கப்படாது தடுத்துவைக்கப்பட்டார்கள். இதனால் மாணவர் பரீட்சைக்குப் பணம் செலுத்தி, விண்ணப்பமனுப்பி, ரியூஷனுக்குப் பணம் செலுத்திப் படித்துக் காலம் வீணாகிவிட்டதெனப் பதைப் பரீட்சைத் திணைக்களம் ஏற்றுக்கொண்டு உரிய நேரத்தில் இந்த அறிவித்தலை அனுப்பிவைக்கத் தவறியமைக்காக இம்மாணவர்களுக்கு மீண்டும் ஒரு பரீட்சை நடாத்த முன்வரவேண்டும். இதுவே தக்க பிராயச்சித்தமாகும். எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் இதனைப் பரிசீலனை செய்து மேலிடத்துடன் தொடர்பு கொள்ளுவார்களென எதிர் பார்க்கின்றோம்.

ந. சிவபாதம்
'புத்தொளி'
அச்சுவேலி

## ஜி. ஸி. ஈ. பரீட்சார்த்திகள் பலர்

# அனுமதிக்கப்பட்ட புகைப்படம் ஏற்கப்படாததால் பாதிப்பு

(மாவிட்டபுரம்)

ஜி சி ஈ (சாதாரண, உயர்தர) பரீட்சைகளுக்குத் தோற்ற கடந்த 10-ம் திகதியாகிய முதலாவது தினத்தில் பரீட்சை நிலையங்களுக்கு உறுதிப்படுத்தப்பட்ட புகைப் படங்களுடன்சென்றுபரீட்சை நிலைய மேற்பார்வையாளர்களினால் அவை ஏற்க மறுக்கப்பட்டதால் பரீட்சையில் தோற்றாது வீடு திரும்பிய மாணவர்கள் பலர் பரீட்சை ஆணையாளருக்கு முறையீடு செய்துள்ளனர்.

ஜி சி ஈ. (சாதாரண, உயர்தர) பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்கு அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தும் இதுவரை அது கிடைக்காமையால் உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படங்களை மாணவர்கள் பரீட்சை நிலையங்களுக்கு எடுத்துச்சென்ற போதும் அதை பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்கள் ஏற்க மறுத்துவிட்டனராம்.

கடந்த 10-ம் திகதியான முதலாவது தினத்தில் இவ்வாறு பல மாணவர்கள் பரீட்சை எழுதமுடியாது தடுக்கப்பட்டனர்.

மறுறான் வடமாநில கல்விபதிபதி விடுத்த அறிக்கையையடுத்து உதவி அரசாங்க அதிபர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோரால் உறுதிப் படுத்தப்பட்ட புகைப் படங்களுடன் சென்றவர்கள் அனுமதிக்கப் பட்டதாகவும் கூறப்படுகிறது.

10-ம் திகதி பரீட்சை எழுத முடியாது தடுக்கப்பட்ட மாணவர்கள் இதுகுறித்துப் பரீட்சை ஆணையாளருக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் முறையிட்டுள்ளனர்.

இந்த மாணவர்களை இனிமேல் நடைபெறும் ஜி. சி. ஈ. (சாதாரண, உயர்தர) பரீட்சைகளின்போது இதேகட்டணத்துடன் இப்பாடங்களில் தோற்ற அனுமதிக்கப்படுமெனவும் பரீட்சைநிலைய மேற்பார்வையாளர்கள் மாணவர்களிடம் தெரிவித்தனராம்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் இவ்வாறு உறுதிப்படுத்தப்பட்ட புகைப் படத்துடன் சென்றதால் பரீட்சை எழுத மறுக்கப்பட்ட மாணவி ஒருவர் திடீரென மயங்கி விழுந்ததாகவும் பின்னர் முதலுதவிகள் அளிக்கப்பட்டு மயக்கம் தெளிந்ததாகவும் கூறப்படுகிறது. (அ)

### கட்டைவேலி-நெல்லியடி சங்கத்தேர்தல்

(உடுப்பிட்டி)

கட்டைவேலி - நெல்லியடிப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபைத் தேர்தல் அடுத்த மாதம் 9ம் திகதி நடைபெறும் என்று சங்கச் செயலாளர் திரு. சோ. இராமலிங்கம் அறிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இயக்குநர் பதவிகளுக்குப் போட்டியிடுவோர் வாக்கு சேகரிக்கும் வேட்டையில் தீவிரமாக இறங்கியுள்ளனர். (அ)

### விதை உ.கிழங்கு வழங்க நடவடிக்கை

(புலோலி)

யாழ். மாவட்டத்தில் 1979-80ம் ஆண்டு உருளைக்கிழங்கு செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளுக்கு விதை உருளைக்கிழங்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இம் மாவட்டத்திலுள்ள 17 கம நலச்சேவை நிலையங்களின்மூலம் விநியோகம் செய்யப்படவுள்ள விதை உருளைக்கிழங்குகளுக்கான விண்ணப்பங்களை அவ்வப்பகுதிப் பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்கள் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறனர். (அ)

### ஜனாதிபதிக் கமிஷன் இன்று கூடுகிறது

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் திரு. விக்டர் தென்னக்கோனின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழு முதற்தடவையாக இன்று காலை 10 மணிக்குப் பாராளுமன்றத்தில் கூடுகிறது.

### நெல்லியடியில் பொலிஸ்தீவிர கண்காணிப்பு

(உடுப்பிட்டி)

நெல்லியடி பஸ் நிலையத்தில் இரவு வேளைகளில் ரியூஷன் முடிந்து வீடு திரும்பும் மாணவிகளிடம் சேஷ்டைகள் புரிந்து வரும் வாலிபர்கள் மீது பருத்தித்துறைப் பொலிஸார் சாதாரண உடையில் தினமும் கண்காணிப்புச் செய்து வருகின்றனர்.

இவ் வாலிபர்களின் தொல்லைகள் பற்றி இப் பகுதிப் பொது மக்களும், பெற்றோர்களும் செய்து கொண்ட முறைப்பாடுகளைத் தொடர்ந்தே பருத்தித்துறைப் பொலிஸார் இந் நேரடி நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

மாணவிகளிடம் தகாத முறையில் நடந்து கொண்டதாகக் கூறப்படும் பல வாலிபர்களைப் பருத்தித்துறைப் பொலிஸார் தேடிவருகின்றனர். (அ)

### யாழ்ப்பாணத்திலும் பூரண அமுல்

(யாழ்ப்பாணம்)

முதன்முறையாக அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட ஞாயிறு வாகனக் கட்டுப்பாட்டுச் சட்டம் யாழ்ப்பாணத்திலும் நேற்று பூரணமாக அமுல் செய்யப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை எட்டு மணி முதல் பிற்பகல் இரண்டு மணி வரை தனியார் வாகனங்கள் உத்தரவின்றி வீதியில் செல்வது தடை விதிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து நேற்று பகல் முழுவதும் யாழ் வீதிகள் வெறிசோடிக் கிடந்தன.

வாகனப் போக்குவரத்துகள் அதிகமாகவுள்ள யாழ் வீதிகள் எல்லாமே வெறிச்சோடிக் காணப்பட்டன. கார்கள், வான்கள், லொறிகள், மோட்டார் சைக்கிள்கள், உழவு யந்திரங்களைக் கூட வீதியில் காண முடியவில்லை.

அவ்வப்போது பஸ்களும், சைக்கிள்களும் மட்டுமே வீதியில் காணக்கூடியதாக இருந்தது.

வாகனக் கட்டுப்பாட்டைத் தொடர்ந்து யாழ் நகரில் பொதுமக்களின் நடமாட்டமும் குறைவாக இருந்தது. (கோ)

### கந்தன் அருள்வேண்டிப் பாடு மனமே!

புலராத காலைப் பொழுதே யெழுந்து
  புகழ்நல்லை சென்று தொழுவாய்!
மலராத வாழ்வு மலர்கின்ற காலைப்
  பொழுதாக நின்று மலரும்!
நிலையான நெஞ்சத் தமைதிக்கும் நல்ல
  உடலுக்கும் முருகன் அருள்வான்!
கலிகால வாழ்வு நலமாகும்! கந்தன்
  துதிபாடு பேதை மனமே!

மதியத்து நல்லைப் பதிசென்று வேலன்
  மலர்பாதம் வேண்டித் துதிப்பாய்!
உதயத்து வானத் தெழிலாகத் தெய்வ
  உணர்வோடு உள்ளம் ஒளிரும்!
இதயத்துக் கோபம் அகங்காரம் யாவும்
  சிதைந்தேகும்! ஆசை வலையில்
மதியற்று வீழும் நிலைமாறும்! பாத
  மலர்வேண்டிப் பாடு மனமே!

இருள்கண்ட மாலைப் பொழுதேகி நல்லை
  எழில்வேலன் பாதம் பணிவாய்!
அருள்கொண்ட வேலன் செயலே பெலமென்
  றகங்காணும்; பற்று விலகும்;
மருள்கொண்ட வாழ்வில் மனமோடு மெய்நம்
  வசமாகி நிற்கும்! அழியாப்
பொருள்கண்டு உய்யும் நிலைகூடும்! கந்தன்
  புகழ்பாடு பேதை மனமே!

சாமத்தின் முன்பும் சருகாக முன்பும்
  சார்வாய்நீ நல்லை; முருகன்
நாமத்தை எண்ணி நம்பித் துதித்து
  நாளைக்கு நல்ல கதிசேர்!
காமத்தில் வாழ்வு கரையாமல் நிற்க,
  காலத்தில் செய்த வினைகள்
ஓமத்தில் இட்ட நெய்யாகக் கந்தன்
  அருள்வேண்டிப் பாடு மனமே!

--க. கணேசலிங்கம்

### "பாவனையாளர் சங்கத்தினால் வர்த்தகரும் நன்மைபெறலாம்"

(புலோலி)

"பாவனையாளர்களுக்குப் பாதுகாப்பளித்து வர்த்தகர்களுடனான நல்லுறவை பாவனையாளர்களுக்கு ஏற்படுத்துவதுடன், பாவனைப் பொருட்களின் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்து பாவனையாளர்களுக்கு உதவி செய்வதற்காகவுமே பாவனையாளர் சங்கங்கள் ஆங்குரார்ப்பணம் செய்யப்பட்டு வருகின்றன. பாவனையாளர் சங்கத்தின் அங்கத்தவர்கள் நேர்மையாகவும், கண்ணியமாகவும் இயங்கினால் பாவனையாளர்கள் மாத்திரமன்றி வர்த்தகர்களும் அதிக நன்மையடையலாம்"

இவ்வாறு பருத்தித்துறை பாவனையாளர்சங்க கருத்தரங்கிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் குறிப்பிட்டார். பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இக்கருத்தரங்கு நடைபெற்றது.

பாவனையாளர் சங்கச் செயலாளர் திரு. கிளா கிருஸ்ணமூர்த்தி உரையாற்றுகையில், பாவனையாளர் சங்கம் வர்த்தகர்களுக்கு எதிரானது என்று ஒருபோதும் கருதக்கூடாதென்றும், ஆனல் பாவனையாளர்களின் குறைபாடுகளைப் போக்கி அவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு பாவனையாளர் சங்கத்தினது முக்கிய கடமையாகும் என்றும் கூறினார்.

திருவாளர்கள் எஸ். சிவபாதசுந்தரம், இ. மகேசன், இரா. பஞ்சலிங்கம், குலவீரசிங்கம் ஆகியோரும் உரையாற்றினர். சங்கப் பொருளாளர் திரு. ஏ. என் எஸ். திருச்செல்வம் நன்றி தெரிவித்துப் பேசினர். (அ)

### கண்டாவளையில் இளைஞர் விவசாயக்கழகம்

(கிளிநொச்சி)

இளம் விவசாயிகளை விவசாயத்துறையில் ஈடுபடுத்தும் முகமாக கண்டாவளையில் இளைஞர் விவசாயக் கழகமொன்றை புளியம்பொக்கணை கமநலச் சேவை நிலையப் பகுதி விவசாயப் போதனாசிரியர் திரு ஆர். இக்லையம்பலம்பலம் அங்குரார்ப்பணம் செய்துவைத்தனர்.

இவ்விளைஞர் விவசாயக்கழக உறுப்பினர்கள் புதிய உப-உணவுப் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்வதுடன் விவசாயிகளுக்கு வேண்டிய ஆலோசனைகளையும் வழங்குவர்.

(புலோ-அ)

### நெருக்கடி நிலையை அமுல் செய்தவர்களின் ஆதரவுடன்

# அதிகாரத்தைக் கைப்பற்றிய தலைவர்களுக்கு ஆட்சிசெய்ய உரிமைகிடையாது

சென்னை, ஆக. 13

"இந்தியாவில் பல கொடுமைகளுக்குக் காரணமாக இருந்த நெருக்கடி நிலையை அமுலுக்குக் கொண்டுவந்தவர்களின் ஆதரவுடனேயே இன்று மத்தியில் ஆட்சி அமைக்கப்பட்டுள்ளது. எனவே இன்றைய ஆட்சியாளருக்கு ஆட்சி நடத்த உரிமை கிடையாது."

இவ்வாறு இந்திய லோக சபையின் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜெகஜீவன்ராம் கூறினார்.

சென்னையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

1977ம் ஆண்டு ஜனதா கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது ஒரு சரித்திர முக்கியத்துவம்வாய்ந்த நிகழ்ச்சியாகும்.

ஜனதாகட்சி, ஆட்சியைக் கைப்பற்றியபின்னர் மக்களின் ஆதார சுதந்திரத்தை மக்களுக்கு திருப்தி அளித்ததன் மூலம் தனது கடமையை நிறைவேற்றிவிட்டது.

தமிழகத்தின் பெருந்தலைவர்களான பேரறிஞர் அண்ணாதுரை, தந்தை ஈ. வெ. ரா, கர்மவீரர் காமராஜர் ஆகியோர் சமத்துவ சமுதாயம் ஒன்றை உருவாக்க விரும்பியிருந்தனர். அதற்கானமுயற்சிகளையும் மேற்கொண்டுவந்தனர். எனவே இன்றைய நெருக்கடியானநிலையில் தமிழக மக்கள் பெருந்தலைவர்களின் அபிலாசைகளை உணர்ந்து தமது மாநிலத்தின் கௌரவத்தை தேடித்தரத்தக்கவிதத்தில் நடந்துகொள்ளவேண்டும்.

### 'ஜனதா-எஸ்' கட்சியில் பிளவுவரும்

இப்போது மத்திய மந்திரி சபையில் இடம் வகிப்பவர்களை மேலும் பலருக்கு மந்திரிப் பதவி தருவதாக திரு. சரண்சிங் வாக்குறுதி அளித்துள்ளார். எனவே அமைச்சரவை விரிவுபடுத்தப்படும்போது 'ஜனதா-எஸ்' கட்சிக்குள் பிளவுஏற்படும். அப்போது ஏமாற்றம் காரணமாக பல எம். பி க்கள் மீண்டும் ஜனதா கட்சியில்வந்துசேருவார்கள். [இ]

## ஏ. வி. எம். செட்டியார் காலமானார்!

சென்னை, ஆக 13

தென்னிந்திய பிரபல தமிழ் திரைப்படத் தயாரிப்பாளரும் ஏ. வி. எம். புரொடக்ஷன் அதிபருமான ஏ.வி. மெய்யப்பசெட்டியார் நேற்று சென்னையில் தமது 77வது வயதில் காலமானார்.

இவர் மஞ்சட்காமாலை நோய் காரணமாக கடந்த ஒருவார காலமாக தனியார் மருத்துவ மனையொன்றில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

40 ஆண்டுகள் திரைப்பட உலகில் சேவைபுரிந்த திரு. மெய்யப்பசெட்டியார் தமிழ் தெலுங்கு, கன்னடம், ஹிந்தி ஆகியமொழிகளில் நூற்றுக்கணக்கான திரைப்படங்களைத் தயாரித்து வெளியிட்டிருந்தார். [இ]

### இந்திரா காங்கிரசின்

# ஆதரவுடன் ஜனதாகட்சி அரசமைக்கக் கூடாது

### இது மக்களின் கட்டளையை மீறும் செயல் என்கிறார் வாஜ்பாய்

புதுடில்லி, ஆக 13

இந்திராகாங்கிரஸின் ஆதரவுடன் ஜனதா கட்சி மத்தியில் அரசமைப்பதைத் தாம் வன்மையாக எதிர்ப்பதாக முன்னாள் வெளியுறவு அமைச்சர் திரு. அட்டல் பிகாரி வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

திரு வாஜ்பாய் இன்னமும் ஜனதா கட்சியிலேயே இருந்து வருகிறார்.

இன்றைய அரசியல் நிலை குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

"கடந்த பொதுத்தேர்தல் முடிவுகள் அதிகாரசக்திகளுக்கு எதிரான தெளிவான வெற்றியாகும். எனவே இந்திரா காங்கிரஸ் கட்சியின் ஆதரவுடன் மத்தியில் ஆட்சி அமைப்பது மக்களின் கட்டளையை எதிர்ப்பது என்று அர்த்தமாகும்.

இம்மாதம் 20ந் திகதி திரு. சரண்சிங்கின் அரசு லோக சபையில் நம்பிக்கையைப்பெற தவறும் பட்சத்தில் அரசு அமைக்கும் வாய்ப்பு ஜனதா கட்சிக்கு அளிக்கப்படவேண்டும்" [இ]

### சரண்சிங்கும், பஹுகுணாவும்

## அரசில் ஒன்றாக இருப்பது அறநெறிப்படி நீதியற்றது

### சந்திரசேகர் கருத்து

புதுடில்லி, ஆக 13

"பிரதமர் திரு. சரண்சிங்கும் நிதிமந்திரி திரு. எச். எம். பஹுகுணாவும் ஒரே மந்திரி சபையில் இருந்து பணிபுரிவது அறநெறிப்படி நீதியற்றது எனவே இவ்விருவரில் ஒருவராவது ராஜினாமாசெய்ய வேண்டும்."

இவ்வாறு ஜனதா கட்சித் தலைவர் திரு சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

திரு சந்திரசேகரின் கருத்துக்குறித்து ஜனதா-எஸ்' கட்சி எம் பி ஒருவர் ஆச்சரியம் தெரிவித்துள்ளார்.

திரு. தேசாயின் ஆட்சிக் காலத்தில் திருவாளர்கள் சரண்சிங்கும் பஹுகுணாவும் மந்திரிகளாகப் பணிபுரிய முடிந்தது என்றால் ஏன் இப்போது அவ்வாறு பணிபுரியமுடியாது என அந்த எம் பி. கேட்டுள்ளார். [இ]

### காலம் வரும் போது

# இந்திய பிரதமர் பதவியை ஏற்பதுபற்றி யோசிப்பேன்

### ராஜ்நாராயண் போட்ட திடீர் குண்டு

புதுடில்லி, ஆக. 13

"இந்தியாவின் தற்போதைய பிரதமர் திரு சரண்சிங்கினால் தமது கடமைகளைச் சரிவரச் செய்யமுடியாமல் போனால்-பிரதமர் பதவியை ஏற்குமாறு மக்கள் என்னை வற்புறுத்தினால்-என்னுடைய கொள்கைகளை மக்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என நான் உணர்ந்தால்-இந்திய அரசியலில் மேற்கண்ட நிலை ஏற்படும் பட்சத்தில் இந்தியாவின் பிரதமர் பதவியை ஏற்பது குறித்து ஆலோசிப்பேன்.

இவ்வாறு ஜனதா கட்சித் தலைவர் திரு. ராஜ்நாராயண் வாரசஞ்சிகை ஒன்றுக்கு அளித்துள்ள விசேட பேட்டியில் தெரிவித்துள்ளார்.

திரு. சரண்சிங் எவ்வாறாயினும் லோகசபையின் நம்பிக்கையைப் பெற்றுவிடும் என்ற நம்பிக்கை தமக்கு உள்ளதாகவும் திரு. ராஜ்நாராயண் தெரிவித்துள்ளார்.

உரியகாலத்திற்குமுன்னர் பொதுத்தேர்தல் ஒன்று நடைபெறவேண்டிய அவசியம் ஏற்படாது என்றும் அவர் தெரிவித்தார். [இ]

## திருட்டுப்போன 4 விக்கிரகங்கள் மீட்பு!

சென்னை, ஆக 13

சேலத்திலுள்ள ஆலயம் ஒன்றில் காவலாளியை கொலை செய்துவிட்டு இனந்தெரியாதவர்களால் திருடிச்செல்லப்பட்ட 3 பஞ்சலோக விக்கிரகங்களும் மேட்டூரில் உள்ள ஆசிரியர் ஒருவரின் வீட்டில் வைத்து பொலிசாரால் கைப்பற்றப்பட்டன.

தாரமங்கலத்திலுள்ள பாடசாலையில் கல்விகற்பிக்கும் ஆசிரியரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 1ந் திகதி இத்திருட்டு இடம்பெற்றது. [இ]

## குஜராத் அணைஉடைப்பு: 1500 பேர் பலி!

புதுடில்லி, ஆக 13

குஜராத்தில் அணைக்கட்டு ஒன்று உடைந்ததையடுத்து 1500பேர் பலியாகியுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 500 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

மீட்பு நடவடிக்கைகளில் இராணுவம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. [இ]

## இ.காங்கிரஸ் ஆக. 18-ல் கூடி முடிவு செய்யும்

புதுடில்லி, ஆக.13

இந்திய லோகசபையில் 'ஜனதா-எஸ்' - காங்கிரஸ் கூட்டரசாங்கத்தின்மீது நம்பிக்கைப் பிரேரணை கொண்டுவரப்படும்போது பிரேரணைக்கு ஆதரவளிப்பதா இல்லையா என்பது குறித்து இந்திரா காங்கிரஸ் கட்சி இம்மாதம் 18ந் திகதி புதுடில்லியில் கூடி ஆராயும். [இ]

# தமிழ்நாட்டில் மாணவர் ஆர்ப்பாட்டம்

### சென்னை, தாம்பரம் கல்லூரிகள் மூடப்பட்டன

சென்னை, ஆக. 13

தமிழ்நாட்டிலுள்ள மாநிலக் கல்லூரி மாணவர்கள் கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இக்கிளர்ச்சிக்கு ஆதரவாக ஏனைய கல்லூரி மாணவர்களும் கிளர்ச்சிசெய்ய முயன்றதையடுத்து பெற்றோரினதும் மாணவர்களினதும் வேண்டுகோளின் பேரில் சென்னையிலும் தாம்பரத்திலும் உள்ள கல்லூரிகள் இன்றும் நாளையும் மூடப்படும் என தமிழக அரசு அறிவித்தது.

விரிவுரையாளர் ஒருவரைத் தாக்கினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் மாநிலக் கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட்ட மூன்று மாணவர்களையும் மீண்டும் பாடசாலையில் சேர்க்குமாறு கோரியே மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர். [இ]

## விமான விபத்தில் உயிர் தப்பினார் 'ராஜ்'

புதுடில்லி, ஆக. 13

'ஜனதா.எஸ்' கட்சித் தலைவர் நேற்று மத்திய பிரதேசத்தில்நடைபெறவிருந்த விமானவிபத்திலிருந்து மயிரிழையில் உயிர் தப்பினார்.

திரு. ராஜ்நாராயண் மத்திய பிரதேசத்திலிருந்து டில்லிக்குத் திரும்பிய விமானத்தின் டயர் திடீரென வெடித்ததைத் தொடர்ந்து இவ்விபத்து ஏற்பட இருந்தது.

விமானத்தின் டயர் வெடித்ததை அடுத்து ஏற்பட்ட சிறு விபத்தில் திரு ராஜ்நாராயணுக்கு வலது புஜத்தில் சிறு காயம் ஏற்பட்டது (இ)

Daily 5 Shows
**SHANTHI** JAFFNA Phone: 7642
— N-B: ALTERED SHOW TIMES —
Daily 10-30, 2-15, 4-45, 7-15, & 9-45
THE DREADED ODESSA
Peter Miller is gone inside. More than a few people hope he does'nt get out..........ever!......
JON VOIGHT... Winner Best Actor Award 1979
with MAXIMILIAN SCHELL & MARY TAMM.
**"THE ODESSA FILE"**
Action - Suspense - Thriller - Scope - Color

**வின்சர்** (யாழ்ப்பாணம்)
போன்: 466
தினசரி 3 காட்சிகள்
10-30, 2-00, 6-00,
சோபன்பாபு - விஜயலலிதா நடித்த
**ரிவோல்வர் ரீட்டா**

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-ஜமுனா
**நிச்சய தாம்பூலம்**
(புதிய பிரதி)

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன் - பாரதி நடித்த
**எ ங் க பா ப் பா**
(புதிய பிரதி)

**SRIDHAR**-Jaffna ஸ்ரீதர்
at 10-30 a m, 3-00 & 7-30 p.m.
AT LAST ITS BACK
The Greatest Motion Picture Of All Time
CECIL B DEMILLE'S
பிரமாண்டமான வெளியீடு!
**TEN COMMANDMENTS**
**பத்துக் கற்பனைகள்**
(டெக்னிக் கலர் — ஆங்கிலம்)
Color
Starring: Two Great Stars
CHARLTON HESTON — YUL BRYNNER
SEE THE PARTING OF THE RED SEA
THE MOST SPECTACULAR SCENE
EVER FILMED
செங்கடல் இரண்டாகப் பிரியும் காட்சி
தத்ரூபமாகப் படமாக்கப்பட்டுள்ளது

**மனோகரா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
மாதர் குலத்தின் அன்பான வேண்டுகோளுக்கு இணங்கி மீண்டும் மூன்று தினங்கள் மட்டு 16ந் திகதி வரை காண்பிக்கப்படும்.
**சபரிமலை ஸ்ரீ ஐயப்பன்**
(கலர்)
பார்த்தவர்கள் பார்க்காதவர்களுக்கு ஐயப்பனின் வரலாற்றைக் கூறி அவர்களுக்கும் மணிகண்டன் அருள் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பத்தை அளித்த உங்களுக்கும் ஐயப்பன் அனுக்கிரகம் உண்டாகும்.
இதுவே கடைசி சந்தர்ப்பம்.
சாமிசரணம்! ஐயப்ப சரணம்!!

**REGAL** (Jaffna)
Daily 10-30, a m 2-00, 4-30, 7-00 p.m. only
No Passes Please
**THE OMEN**
Twentieth Century Fox presents
GREGORY PECK—LEE REMICK
விநாடிக்கு விநாடி உங்களை மெய்சிலிர்க்க வைக்கும் பயங்கரப் படம்.
**"ஆவிகளின் அட்டகாசம்"**
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
(FOR ADULTS ONLY)

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி: 10-30, 2-30, 6-30, & 9-45,
கே. பி. சுந்தராம்பாள் நடித்த
**ஔ வை யா ர்**

**லிடோ** (யாழ். நகர்)
போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
**கல்யாணபரிசு**
(புதிய பிரதி)

# இன்றைய பலன்

ஆடி மாதம் 29-ம் திகதி
(செவ்வாய்க்கிழமை)
(14-8-1979)

**மேஷம்:** கருப்பாக இனித்தது இன்று வேம்பாகக் கசக்கக் கூடும் மனப்போராட்டங்களினால் வேதனைப்படுவீர்கள் அதிக முயற்சி எடுத்தாலும் அற்ப லாபமே கிடைக்கும் முன் எச்சரிக்கை வேண்டும்.

**இடபம்:** அதிகாரப் பேறுக்கும் அதிகபொருள் வரவுக்கும் இடமுண்டு. ஆக்கப்பணிகளில் ஈடுபடுவீர்கள். குடும்பத்திலும் மகிழ்ச்சி நிலவும் வேலிடத்திலிருந்து திருப்திகரமான செய்தி கிடைக்கும்.

**மிதுனம்:** முன்னேற்றப் பாதையில் தடைகள் உருவாகும். எதிரிகளின் சூழ்ச்சிகள் பலமாக இருக்கும் உள்வீட்டிலேயே பூசல்கள் அதிகரிக்கும் சிலருக்கு உடல்நலமும் பாதிக்கப்படலாம்.

**கடகம்:** வாழ்வில் இன்று வெற்றித்திருநாளாகும் எதிலும் அதிர்ஷ்டம் உங்கள் பக்கமே இருக்கும் புதிய பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு நன்றுவெளியிடத்துத் தொடர்புகளும் சிறப்பைத் தரும்.

**சிங்கம்:** இதயங்கள் இணைகின்ற இன்று நல்லநாள் அபிப்பிராயபேதங்கள் மறையும் பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர் பந்துக்கள் ஆதரவு பெருகும் குடும்பத்தில் ஆதரவு நிலவும்.

**கன்னி:** வட்டமிடும் கழுகுப்பார்வை உங்களை மிரட்டப்பார்க்கும் பிரயாணத்தில் போது பொருள் நழுவக்கூடும் மனதிலுள்ள திட்டங்களை வெளியில் சொல்லாதிருப்பது நன்று திருப்தியற்றதினம்.

**துலாம்:** வாழ்வுப்பயணத்தில் இன்று வளமான திருப்பம் ஏற்படும் இலட்சியவாதிகள் பூரிப்படைவார்கள் குடும்பத்தில் குதூகலமான சம்பவம் இடம்பெறும் பொதுவாக மனநிறைவுக்கு இடமுண்டு.

**விருச்சிகம்:** விபத்திற்கு இடமேற்படும் எதிலும் நிதானத்துடன் நடந்துகொள்ளவும் பல வழிகளிலும் பணம் செலவாகும் சிலர் கடன்படவும் நேரிடலாம் எதிரிகளின் அட்டகாசம் அதிகரிக்கும்.

**தனுசு:** பொதுத்துறையில் நாட்டம் ஏற்படும் சிலர் தேர்தல் ஜுரத்தாலும் பீடிக்கப்படலாம். பிதாவழியின் மூலம் ஆதரவுக்கு இடமுண்டு கொள்கைவழி வாழ்க்கை அமைப்பதில் மகிழ்ச்சியடைவீர்கள்.

**மகரம்:** ஓய்வையும் உல்லாசத்தையும் விரும்புவீர்கள் தொழில்துறையில் விரைவில் நல்லமாற்றம் ஏற்படலாம் உங்களின் ஆதரவைத்தேடி ஒரு சிலர் படை எடுப்பார்கள் இன்று பொன்னான தினம்.

**கும்பம்:** எழுத்தாளர்களுக்குச் சிறப்பான தினம் பத்திரிகைத் தொழிலில் ஈடுபடுபவர்கள் அதிகபயன் அடைவர் நீண்டநாள் எதிர்பார்த்த பொருள்வரவு இன்று கிடைக்கலாம். அறிஞர் ஆலோசனையும் கிடைக்கலாம்.

**மீனம்:** மேலிடத்திலிருந்து நேசக்கரம் நீட்டப்படும் எதிரிகள் கூட உங்களிடத்தில் அன்பு காட்டுவார்கள். குடும்பத்தில் அமைதிநிலவும். சிலர் வாழ்க்கையில் காதல் பிரச்னைகளுக்கு இடமுண்டு நல்ல நாள்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

**நாகம்மஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
**இன்ஸ்பெக்டர் மனைவி**

**வெல்லி**
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்-சுஜாதா
**உயர்ந்தவர்கள்**

**RIO** (Jaffna-TownHall)
Phone: 7607
Daily 10-30, 4-45, 7-00, 9-30 P M.
Ryan O' Neal
Bruce Dern in
**DRIVER**

# வல்வைநகருக்கு குழாய் நீர்த்திட்டம்

(உடுப்பிட்டி)

வல்வெட்டித்துறை நகரசபைப் பகுதியில் மின்சார விநியோகத்தை விஸ்தரிப்புச் செய்வதற்கென ஏற்கனவே யுள்ள இரு மின்மாற்றிகளுடன் மேலும் ஒரு மின்மாற்றியைப் பொருத்துவதென்று வல்வெட்டித்துறை நகரசபை முடிவு செய்துள்ளது

வல்வெட்டித்துறை நகரசபையின் மாதாந்தக் கூட்டம் நகர சபைத் தலைவர் திரு எஸ். ஞானமூர்த்தி தலைமையில் நடைபெற்றபோதே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது

வல்வெட்டித்துறை நகரின் குடிநீர்ப் பிரச்னையைப் போக்கும் நோக்கமாகக் குழாய்மூலம் நீர் விநியோகம் செய்வதென்றும் மயிலியதனையிலுள்ள வற்றா நீர் ஊற்றைக் கொண்ட கிணற்றிலிருந்து குழாய் மூலம் நீர் விநியோகம் செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டதுடன் நில, நீர்வள அதிகாரசபையின் உதவியுடன் இக் குழாய் நீர் விநியோகத் திட்டத்திற்கான சாத்தியக்கூற்று அறிக்கையை தயாரிப்பது பற்றியும் இக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

பொலிகண்டிக் குடியேற்றத் திட்டத்தில் 10,000 ரூபா செலவில் சனசமூக நிலையம் ஒன்றைப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் நிறுவுவதென்றும் முடிவுசெய்யப்பட்டது. (அ)

## அடிக்கடி படம்பார்ப்பதை தந்தை கண்டித்ததால் மகன் தற்கொலை

(மாவிட்டபுரம்)

அடிக்கடி படம்பார்ப்பதில் ஈடுபட்டிருந்த தனயனை பெற்றோர் ஏசியதால் மனமுடைந்து நஞ்சருந்தி மரணத்தைத் தழுவிக்கொண்டார்

சுன்னாகத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை மனோகரன் என்னும் வாலிபரே இவ்வாறு மரணத்தைத் தழுவியவராவார்.

தொழில் எதுவுமின்றி அடிக்கடி படம்பார்ப்பதில் காலமானவர், ஈடுபட்டுவந்தமையால் பெற்றோர் கண்டித்து வந்ததாகவும், சம்பவதினம் முதலாவது காட்சி படம் பார்த்துவிட்டு அவர் வீடு திரும்பியபோது பெற்றோர் கடுமையாகக் கண்டித்ததாகவும் அதனையடுத்து அவர் நஞ்சருந்தியதாகவும் விசாரணையில் தெரியவந்தது

விசாரணை நடத்திய திடீர் மரண விசாரணை அதிகாரி திரு நா. தம்பிராசா ஜே. பி. தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கினார்

## புதிய அலுவலக நேரம்: மேல்மாகாணத்திலும் காலிமாவட்டத்திலுமே அமுல்

(கொழும்பு)

நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ள புதிய அலுவலக நேரங்கள் மேல் மாகாணத்திலும் காலி நிர்வாக மாவட்டத்திலும் அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இம்முறை பரீட்சார்த்தமாகவே அமுல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிறு முதல் நடைமுறைக்கு வந்துள்ள வாகனத் தடைச் சட்டமே நாடுமுழுவதும் அமுல் செய்யப்படுகிறது (இ)

## யாழ். மாவட்டத்தில் முடிக்குரிய காணிகள் விபரம் திரட்டப்படுகிறது

(புலோலி)

யாழ். மாவட்டத்தின் சகல கிராமங்களிலுமுள்ள முடிக்குரிய காணிகள் ஒவ்வொரு கிராமத்தினதும் தேவைகள் வெவ்வேறு காரணங்களுக்காக கிராமங்களில் ஒதுக்கப்பட்டுள்ள காணிகள், கிராமங்களின் குடிசனச் செறிவு, விவசாயத்திற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள காணிகளின் அளவுகள் என்பனவற்றைக் கொண்ட புள்ளி விபரமொன்று திரட்டப்பட்டு வருகிறது.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் உத்தரவின் பேரில் உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவு ரீதியாக இப் புள்ளி விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன. நீர்ப்பாசனத் திணைக்களம், நில அளவையாளர் திணைக்களம், விவசாயத் திணைக்களம், சமூகநலச் சேவைத் திணைக்களம், வனபரிபாலன இலாகா, உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியன ஒன்றிணைந்தே அப்புள்ளி விபரங்களைத் திரட்டும் முயற்சியிலீடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## புலமைப்பரிசில்

(உடுப்பிட்டி)

கரவெட்டி திரு இருதயக்கல்லூரி மாணவனான திரு. ஆ. கேதீஸ்வரன் (ஜீ சீ ஈ சாதாரண தர) பரீட்சையில் கூடுதல் விசேடசித்திகளைப் பெற்றதைத் தொடர்ந்து அரசாங்கத்தின் புலமைப்பரிசில் பெற்றுள்ளார்.

இவர் கரவெட்டியைச் சேர்ந்த திரு. வே. ஆறுமுகம் தம்பதிகளின் புதல்வராவார்.

# நினைவோடு நிலைத்தவர்



வானத்தில் இருள்சூழ்ந்தால் மழைவரும்; வாழ்வில் இருள் சூழ்ந்தால் ......?

பொலிஸ் இன்ஸ்பெக்டர் குருசாமியின் மறைவால் இருள்சூழ்ந்திருக்கும் இன்று ரது குடும்பத்திற்கு ஆறுதல் கூற வார்த்தையேது?

இன்ஸ்பெக்டர் குருசாமி இவ்வுலகைவிட்டுப் பிரிந்து இன்றுடன் 45 நாட்கள் கழிந்துவிட்டாலும் அன்னாரின் அன்புப் பார்வை, குளிர்ந்த புன்னகை, கண்ணியம்மிக்க கட்டுப்பாடு இவை எமது மனக்கண் முன் நிழலாடுகின்றன.

பருத்தித்துறையில் புலோலி எனும் ஊரிலே திரு சாமி பொன்னுசுவாமிக்கும் திருமதி லட்சுமிப்பிள்ளைக்கும் புத்திரராக 1922ம் ஆண்டு கார்த்திகை மாதம் 15ம் திகதி பிறந்தவரான திரு குருசாமியின் சகோதரர்கள் இருவர் பொலிஸ்சேவையில் உள்ளனர். திரு சண்முகம் கான்ஸ்டபிளாக இருந்தவர். திரு. தம்பிராஜா இன்ஸ்பெக்டர் பதவிவகித்துத் தற்போது ஓய்வுபெற்றுள்ளார். இவருக்கு ஏழு சகோதர சகோதரிகளுமுள்ளனர்.

இளவயதிலிருந்தே - யாழ் மத்திய கல்லூரியின் மாணவனாக இருந்தபோதே திரு. குருசாமி கல்வியிற் சிறந்து விளங்கினார். ஏட்டுக்கல்வியுடன் உடற்கல்வியையும் போற்றிவந்த இவர் கிறிக்கற், உதைபந்தாட்டம், கரபந்தாட்டம், றகர் போன்ற விளையாட்டுக்களில் ஈடுபட்டு விளையாட்டுவீரராகத் திகழ்ந்ததோடு, குத்துச்சண்டைபோன்றவற்றிலும் வல்லவராக விளங்கினார்.

கண்ணியமும் கட்டுப்பாடும் மிக்க குடும்பத்தில் பிறந்தவரான இவர், இவரது இரு சகோதரர்கள் போலவே இளமையில் பொலிஸ்சேவையில் சேர்ந்து நாட்டிற்கு உழைக்கப்பேரவாக்கொண்டிருந்தார். இவரது அவா 1941ம் ஆண்டு 6ம் மாதம் 1ம் திகதி நிறைவேறியது! அன்றுதான் திரு. குருசாமி இலங்கைப் பொலிஸ் படையில் ஒரு சாதாரண பொலிஸ் கான்ஸ்டபிளாகப் பதவிபெற்றார். ஆயினும் கடமையுணர்வும் அறிவுத்திறனும்பெற்றவரான இவர் 1951ம் ஆண்டு சார்ஜனாகவும் 1969ல் உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டராகவும் பதவி உயர்வு பெற்றார். இவரது சேவைத்திறனும் விவேகபுத்தியும் இவருக்கு 1975ம் ஆண்டு வைகாசி மாதம் 1ம் திகதி பொலிஸ் இன்ஸ்பெக்டர் பதவியைப் பெற்றுக் கொடுத்தது. எல்லோருடனும் அன்புடனும் பண்புடனும் பழகியதால் எல்லோரிடத்தும் அவருக்கு மதிப்பு ஏற்பட்டது;

இறக்கின்றவரையில் தாம் வாழ்வில் கடைப்பிடித்து வந்த உண்மை நேர்மை என்பவற்றைக் காத்துவந்த இவரது தொழிற்திறனுக்கும் விவேகத்துக்கும் பொலிஸ் படையில் குறுகியகாலத்தில் இவர் பெற்ற 349 மெச்சத்தக்க பரிசுகள் எடுத்துக்காட்டாகும். அதுவுமன்றி இவரது மறைவினால் இவரது குடும்பம் துயரில் மூழ்கியிருந்தவேளை இலங்கைப் பொலிஸ் படையின் மாஅதிபர் திரு டி ஏ டி ஈ ஏசெனவிரத்ன தமது ஆழ்ந்த அனுதாபத்தை அன்னாரது குடும்பத்திற்குத் தெரிவித்து அனுப்பிய கடிதத்தில் திரு குருசாமியின் பிரிவில் துயருறும் தமக்கு ஆறுதல்கூற வார்த்தையில்லையே" என எழுதியதிலிருந்து பொலிஸ்சேவையில் எத்தகைய இழப்பை இவரது மரணம் ஏற்படுத்தியிருக்கின்றது என்பது புலனாகும்.

அமரர் குருசாமியின் அந்தியேஷ்டிக் கிரிகைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கீரிமலையில் நடைபெற்றன. இன்று வீட்டுக் கிருத்தியம் நடைபெறுகின்றது. அன்னாரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தவர்களுக்கும் - அவர்பால் ஈடுபாடுடைய அனைவருக்கும் ஆறுதல் கிட்ட அன்னாரது ஆத்மா சாந்திபெறவும் எல்லாம்வல்ல இறைவனை வேண்டுவோம்.

ஐயா. சச்சிதானந்தம்

---

யாழ். பிராந்திய வானொலி நிலையம்:

# காணியில் குடியிருந்தவரை வெளியேற உத்தரவு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பிராந்திய வானொலிநிலையம் நிறுவப்படவிருக்கும் காணிக்குள் குடியிருப்பவரை உடனடியாக வெளியேறுமாறு யாழ் நீதவான் திரு. ராஜசிங்கம் கட்டளையிட்டுள்ளார்.

இக்காணிக்குள் வசிக்கும் சுப்பன் கந்தசாமி என்பவரை அரசகாணி ஆட்சிமீளப்பெறுதல் சட்டத்தின் கீழ் காணியிலிருந்து வெளியேற்றுமாறு மாவட்ட காணி அதிகாரி திரு. கே. ரி. சம்பந்தர் வழக்குத்தாக்கல் செய்திருந்தார்.

எதிரிசார்பில் சட்டத்தரணி ராஜராஜேஸ்வரன் தங்கராசா ஆஜரானார்.]

காணியிலிருந்து உடனடியாக வெளியேறுமாறு நீதவான் தீர்ப்பளித்துள்ளார்.

இதேசமயம், காணிக்குள் குடியிருக்கும் சுப்பன் கந்தசாமிக்கு கொழும்புத்துறையில் 3 பரப்புக்காணி வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (ஈ)

## யாழ். கல்வி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யம், செல்வன் சௌந்தயன் நடராசா, யாழ். பரியோவான் கல்லூரி, செல்வி சந்திரா கந்தையா, மன்/புனித சவேரியார் பெண்கள் பாடசாலை, செல்வி கோவுலா இரத்தினசபாபதி. உ/கண்டி மகளிர் உயர் பாடசாலை.

பல்கலைக்கழக புலமைப் பரிசில்

1 ஆவது செல்வன் கோபிநாத் - சந்திரசேகரம், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி,

2 ஆவது செல்வன் முருகதன் குமாரசாமி, யாழ். இந்துக் கல்லூரி.

2 ஆவது செல்வி பிரியதர்சினி பாலேந்திரா, வட இந்து மகளிர் கல்லூரி.

ஆகக்கூடுதலான மாணவர்களை அனுப்பி வரிசையில் சிறப்புச் சான்றிதழ்களுடன் பரிசில்பெறும் முதல் 8 பாடசாலைகள்: சாவகச்சேரி இந்துக் கல்லூரி, புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தர் கல்லூரி. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, பருத்தித்துறை மெ. மெ. உ. பாடசாலை, நெல்லியடி ம. ம. வித்தியாலயம், கொ/விவேகானந்த ம. வித்தியாலயம், கொ/பம்பலப்பிட்டி இந்துக் கனிட்ட பாடசாலை, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.

ஆகக்கூடுதலான மாணவர்கள் சித்தியடைந்த வரிசையில் முதல் 8 இடங்களையும் பெறும் பாடசாலைகள்:

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, பருத்தித்துறை மெ. மெ. உ, பாடசாலை, புத்தூர். ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, கொ/பம்பலப்பிட்டி இந்து கனிஷ்ட பாடசாலை, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி ம. ம. வித்தியாலயம், காங்கேசன்துறை நடேசுவராக் கல்லூரி. (செ)

## காணியற்றோருக்கு ஒன்றரைப் பரப்புக் காணி

[யாழ்ப்பாணம்]

கிராமிய விஸ்தரிப்பு திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் கில்லூண்டி. மயானத்திற்கருகில் மூன்று ஏக்கர் காணி சுவீகரிக்கப்படவிருக்கிறது

ஒருவருக்கு ஒன்றரைப் பரப்பு வீதம் யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் காணியில்லாதவர்களுக்கு வழங்கப்படவிருக்கிறது.

கடந்த வருடம் இப்பகுதியில் 40 பேருக்கு ஒரு பரப்பு வீதம் காணி வழங்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

குடியிருப்பதற்கு ஒரு பரப்பு போதாமலிருப்பதனால் ஒன்றரைப்பரப்பு வழங்க முடிவு செய்யப்பட்டது. (ஈ)

யோகேந்திராவிடம்

## வேலை கோரி 5 ஆயிரம் பேர் விண்ணப்பம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் திரு யோகேந்திராதுரைசுவாமியிடம் இதுவரை சுமார் ஐயாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் வேலை கோரி விண்ணப்பித்துள்ளதாக தெரியவருகிறது.

தினமும் வேலைகோரி விண்ணப்பிப்போர் தொகை அதிகரித்துவருவதால், விண்ணப்பங்களைப் பரிசிலனைசெய்து ஏற்றுக்கொள்ள நால்வர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக அரசாங்க அதிபர் திரு ஜெகந்நாதன், உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். எஸ். தர்மபாலன், திட்டமிடல் பிரிவு அதிபர் திரு. லோகேஸ்வரன், உதவி அரசாங்க அதிபர் திரு. கே. பஞ்சலிங்கம் ஆகியோர் விண்ணப்பங்களை ஏற்றுவருகின்றனர்;

தினமும் தபால் மூலமும் நூற்றுக்கணக்கான விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுவருகின்றன.

திங்கள், புதன் ஆகிய இருதினங்களில் மட்டுமே வேலைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

இவ்விரு தினங்களும் கச்சேரியில் கடமைபுரியும் உத்தியோகத்தர்கள் பொதுமக்களுடன் நேரடியாகத்தொடர்பு கொள்வதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

வேலைக்கான விண்ணப்பத்திற்கு பிரத்தியேகமான விண்ணப்பபத்திரம் எதுவுமில்லையென்றும், பெயர், விலாசம் மற்றும் விபரங்களும் பரீட்சைப் பெறுபேறுகள் விரும்பும் தொழில் ஆகிய வற்றை எழுதவேண்டுமென சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். (ஈ)

## மூவர் மரணம்...

(1ம்பக்கத்தொடர்ச்சி)

தலைவர் திரு. ஏ. ஜோசப் இது சம்பந்தமான கடிதமொன்றை யாழ் ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

ஒரே வாரத்தில் இரண்டு வார்ட்டுகளில் மூன்று நோயாளர்கள் கட்டிலால் விழுந்து மரணமானது தொடர்பாக யாழ். மாவட்ட செயலாளரும் யாழ் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமியும் துரித நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக "ஈழநாடு" அறிகிறது.

மேற்படி மூன்று மரணங்கள் தொடர்பாக யாழ் சுகாதார வைத்திய அத்தியட்சகரிடம் திரு. யோகேந்திரா துரைசுவாமி அறிக்கை கோரியிருப்பதாக அறியப்படுகிறது.

நிலைமை இவ்வாறிருக்க இம்மரணங்கள் தொடர்பாக பல கண்டனக் கடிதங்களும், தந்திகளும் சுகாதார அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

அடுத்த சில தினங்களில் யாழ் ஆஸ்பத்திரியில் உயர்மட்ட விசாரணை நடைபெறுமென்று அறியப்படுகிறது.

## எந்தவாகனமும் சிக்கவில்லை

[மாவிட்டபுரம்]

வாகனத்தடைச் சட்டத்தை வாகனச் சொந்தக்காரர்கள் முதல் ஞாயிறன்று நன்கு அனுசரித்தனர். இதனால் பொலிசாரிடம் எவரும் சிக்கவில்லை;

ஞாயிற்றுக்கிழமை முதல் முதலாக அமுலான வாகனத் தடைச்சட்டத்தின்போது காங்கேசன்துறைப் பொலிஸ் பகுதியில் பொலிசார் ரோந்து சுற்றியபோதிலும் எந்த வாகனமும் அகப்படவில்லை. யாழ். தனியார் மோட்டார் வாகனங்கள் எதுவும் வீதியில் காணப்படவில்லையாம்.

இ. போ. ச. பஸ்கள் அன்று அதிகமாக சேவையிலீடுபட்டன. (ஈ)

---

## நாளை ஞானபீடமேற்ற 13-வது ஆண்டுவிழா

[யாழ்ப்பாணம்]

நாளை ஞானசம்பந்தர் ஆதீன குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ பரமாசாரிய சுவாமிகள் ஞானபீடமேற்ற 13-வது ஆண்டு விழா நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது

நாளைக்காலை 5 மணிக்கு விஸ்வரூப தரிசனமும், 6 மணிக்கு திருமுறை வீதி பஜனையும், 8 மணிக்கு பீடாபிஷேகமும், 10 மணிக்கு வேதாபரணமும், 11 மணிக்கு திருமுறை ஓதலும், 11-30 மணிக்கு கார்த்திகை உற்சவமும். நண்பகல் 12 மணிக்கு கொலு பூஜையும் நடைபெறும்.

மாலை ஒரு மணிக்கு வாழ்த்தியல் போற்றி உரை, இரவு 7 மணிக்கு பட்டணப் பிரவேசம், 8 மணிக்கு கொலு பூஜை, 8-30 மணிக்கு வாழ்த்தியல் போற்றி உரை ஆகியனவும் நடைபெறும். (சொ)

## பிரதமருக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரும் விமான நிலையத்தில் அன்புடன் வரவேற்றனர்

விமான நிலையத்தில் பெருந்திரளான மக்கள் குழுமி நின்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்

பிரதமர் பிரேமதாசா சீனாவில் ஒரு வார காலம் தங்கியிருப்பார்

## இன்றைய உற்சவம்

[யாழ்ப்பாணம்]

வண்ணை ஸ்ரீ செந்தில் கதிர் வேலாயுத சுவாமி கோவிலில் இன்று 31-வது நாள் மண்டலாபிஷேகம் காலை 9 மணிக்கு நடைபெறும் பிற்பகல் 5-30 மணிக்கு சாயங்காலப் பூசையைத்தொடர்ந்து "ஓங்காரம்" என்ற தலைப்பில் பிரமஸ்ரீ இ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் உரையாற்றுவார், 6-30 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் சுவாமி வீதிவலம் வருதலும் நடைபெறும் (சொ)

## வாழ்த்துச் செய்தி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட செயலாளர் திரு யோகேந்திரா துரைசுவாமி, யாழ் அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டதைப் பாராட்டி பலர் வாழ்த்துச்செய்திகள் அனுப்பியுள்ளனர். (க)

## பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண செயலகத்தில் காரியாலய உதவியாளராகப் பணிபுரிந்த திரு. எஸ். கணேஷ் இம்மாதம் 10-ந் திகதி முதல் உதவி அரசாங்க அதிபரா பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (செ)

## யுவதி கைது

[மாவிட்டபுரம்]

இந்தியாவுக்குச் செல்ல வேண்டிய காலக்கெடு முடிந்த போதும் இந்தியா செல்லாது வீடொன்றில் வேலைக்கிருந்த 15 வயதுடைய நுவரெலியாவைச் சேர்ந்த யுவதி ஒருவரை காங்கேசன்துறைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

செட்டி ஜெயமணி என்னும் இந்தயுவதி காங்கேசன்துறைப் பொலிஸ் பகுதியில் வீடொன்றில் வேலைக்கிருந்த சமயம் காங்கேசன்துறைப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

இந்தியா செல்லவேண்டிய காலக்கெடுமுடிந்தும் 6 மாதங்களுக்கு மேலாக இவர் இங்கு தங்கியுள்ளதாக விசாரணையில் தெரியவந்தது. (க)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No: GB/8948/78 The Eelanadu P B No 49, Telegram: Eelanadu: T. Phone: 389.